சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.வெ.லோகநாதன், இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.வி.வெங்கடேசன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அலுவலகம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண். 123 நாள்: 03.11.2020.

திருவள்ளுவர் ஆண்டு–2051
சார்வரி, ஐப்பசி – 18

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.56470/ப.தொ.4/இரு.3/2019, நாள் 05.08.2020.

-----

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.வி.வெங்கடேசன் என்பவர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி அலுவலகத்தில் மஸ்தூராகப் (பைலேரியா) பணியாற்றி வரும்போது 05.04.2007 அன்று காலமானார். மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.வெ.லோகநாதன் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 02.12.2019 அன்று முற்பகல் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அலுவலகத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து அவரது பணியினை தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 02.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010 மற்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு, சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் ஆய்வு செய்தபோது, திரு.வெ.லோகநாதன் என்பவர் மேற்படி அரசாணையில் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளது தெரிய வருகிறது.

3. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை

அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

4. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.வெ.லோகநாதன் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 02.12.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

5. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.16218/க்யூ1/2020-2, நாள்: 17.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 26960/ஜி2/2020-1, நாள்: 24.10.2020 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை- 600 006.
தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை-600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை- 600 018.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு), சென்னை – 600 035.

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்